**எல்பிட்டிய பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எல்பிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, எல்பிட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய பங்களிப்புச் செலவு ரூபா 87,970 தொகை மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 460,424 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பன உப அலுவலகத்தில் இறுதி இருப்பு மீதி ரூபா 131,890 தொகை குறைவாக கணக்கீடு செய்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 362,264 தொகைக்கான வட்டி வருமானம் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் நிலையான வைப்புக்களின் பெறுமதி அத் தொகையினால் குறைந்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ஆயுர்வேத இருப்பு கொள்வனவு செய்தல் ரூபா 3,879,545 தொகை உதவி பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | முற்பெறுவனவு வீதவரி வருமானம் ரூபா 112,485 தொகை எனினும், அதனை ரூபா 104,903 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2022 ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மின்சார இருப்பு மீதி ரூபா 33,120 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 23,231,115 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சமமின்மைகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 759,000 தொகைக்கான 2 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24 | சபைக்கு சொந்தமான 393.36 கி.மீ. நீளமான 425 பாதைகளை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் வெளியிட்டுக்கவில்லை. | பாதைப் பதிவேடு தயாரித்த பின்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பாதைகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1988 மாகாண சபைகள் நிதி மற்றும் நிருவாக விதி 476 மற்றும் 477 | வருடாந்தம் சபைக்குச் சொந்தமான 20 வாகனங்களுக்காக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | வாகனங்கள் தொடர்பான வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | சிறிய அளவிலான மாசுபடுத்தும் கைத்தொழில்/ செய்முறைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.7.1 | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் உச்சமட்ட செல்லுபடியாகும் காலம் 03 வருடங்களாக காணப்பட்டதுடன் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த 25 நிறுவனங்கள் காணப்பட்டது. | குறிப்பிட்ட நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 15,458,720 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 38,869,036 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 7,466,500 | 5,195,094 | 4,870,825 | 19,117,607 | 5,946,500 | 5,105,210 | 4,166,434 | 18,793,338 |
| வாடகை | 3,460,000 | 3,587,670 | 5,258,828 | 2,354,064 | 3,109,200 | 4,798,850 | 5,628,046 | 4,025,222 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 852,000 | 2,157,390 | 2,070,940 | 100,000 | 716,500 | 1,209,894 | 1,236,244 | 13,550 |
| ஏனைய வருமானங்கள் | 13,843,500 | 13,037,176 | 13,156,216 | 804,837 | 7,193,000 | 12,902,697 | 12,994,657 | 923,877 |
| | 25,622,000 | 23,977,330 | 25,356,809 | 22,376,508 | 16,965,200 | 24,016,651 | 24,025,381 | 23,755,987 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 23,755,987 தொகையாக காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு அந்த மொத்த நிலுவை வருமானம் ரூபா 22,376,508 தொகையாக இருந்தது. வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதியில் காணப்பட்ட ரூபா 5,856,963 தொகைக்கான 1702 மீதிகள் மற்றும் நிலுவைக் கடை வாடகை மீதியில் காணப்பட்ட ரூபா 2,176,592 இற்கான 16 மீதிகள் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்றவை ஆகும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்த நிலவுகின்ற நிலுவைத் தொகையும் தீர்க்கப்படும் எனவும் மற்றும் மூடப்பட்டிருந்த போது சிட்டையிடப்பட்ட கடையறைகளில் ரூபா 2,176,382 இற்கான தொகை பதிவழிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிலுவை கடை வாடகை செலுத்தாத மற்றும் வியாபார அலுவல்கள் மேற்கொள்ளாத பிரதேச சபைக்கு சொந்தமான 15 கடையறைகள் 2022 மார்ச் மாதம் சீல் | பழைமையான கட்டிடமாக இருப்பதனால் திருத்த வேலை மேற்கொள்வதற்கு முடியாத மட்டத்தில் சிதைவடைந்திருந்தது என. | சபை ஆதனங்களில் இருந்து உச்சமட்ட பயன் பெற்றுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த கடையறைகளை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் குறிப்பிட்ட கட்டிடங்கள் அழிவடையக் கூடிய நிலைமையில் காணப்பட்டது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 19 கடையறைகளை கொண்ட இரண்டு கட்டிடங்கள் பலவீன நிலையில் காணப்படுகின்றமையால் திருத்த வேலை மேற்கொண்ட பின்னர் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அறிவிப்பது என அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் அறிவித்திருந்த போதிலும், அந்த கடையறைகளை திருத்த வேலை மேற்கொள்ளாமையால் கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் சபைக்கு உழைக்கக் கூடியயதாக இருந்த வருமானத்தை இழந்திருந்தது. | இந்த கட்டிடம் முழுமையாக அகற்றி தற்போதைய சந்தைக்கு ஏற்ற விதத்தில் நவீன கூறுகள் அடங்கிய சிறப்பு வர்த்தக கட்டித் தொகுதியொன்று நிர்மாணிப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என. | கடையறைகள் புதிதாக நிர்மாணித்து சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,996,965 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 998,084 தொகை காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை மீதிகள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வாராந்த சந்தைகள் ரூபா 757,552 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 06 வருடங்கள் முதல் செயற்படாமல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்டது. | வியாபாரிகள் முன்வராமையினால் தோல்வியடைந்துள்ளது என. | சபையின் ஆதனங்கள் மூலம் உச்சமட்ட பயன்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 56 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான காணி உறுதிகள் சபையில் காணப்படாததுடன், அந்த காணிகளின் உரிமையை தீர்த்துக் | சபைக்கு சொந்தமான காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சபைக்கு சொந்தமான காணிகளின் உரிமையை தீர்த்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 11,131,501 தொகை பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 02 வாகனங்கள் 04 மாதங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது என. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜயந்தி மாவத்தை மற்றும் பெலென்தகொட பாதையை தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்கான நிர்மாண வேலையின் வேலை விடயம் 04 தொடர்பாக இயந்திரம் மூலம் பழைய பாதையை கழற்றி அகற்றும் போது வேலை விடயம் இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாதையின் இரு மருங்கிலும் உயர்ந்த இடங்களை வெட்டுவதற்காகவும் அந்த இயந்திரங்களை பயன்படுத்த இயலுமாக இருந்தமையால் அதற்காக மனித உழைப்பின் மூலம் மண் வெட்டுவதற்குரிய ரேட்கள் பயன்படுத்தியமையால் ரூபா 135,717 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரேட்கள் தொடர்பாக தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க உள்ளது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பக்கச் சுவர்களின் வடிவமைப்பு வேலைகளுக்காக உரிய ரேட்கள் பயன்படுத்தாமையால் ரூபா 259,885 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரேட்கள் தொடர்பாக தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச்சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள, சேவையை இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் தகவல்கள் கண்டறிய முடியாத 07 உத்தியோகத்தர்களிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 364,678 இற்கான கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |